**ARTICLE 57 | Research Article – Peer Reviewed | Article ID: TAJP-2026-00059**
Vol. 20, No. 01 (October 2026) – Part III | pp. 23–25
Received: 1 October 2026 • Accepted: 3 October 2026

# தென் மாவட்ட சடங்கு முறைகள்

**முனைவர்.தீபா பெ[1,*]**
[1]உதவிப்பேராசிரியர், தமிழ் துறை சுழற்சி-2, பச்சையப்பன் மகளிர் கல்லூரி, காஞ்சிபுரம்-631502., India
***Corresponding author / தொடர்பு ஆசிரியர்:** முனைவர்.தீபா பெ — tamilseminar12@gmail.com

## ஆய்வுச் சுருக்கம்

தமிழ்நாட்டின் தென் மாவட்டங்களில் நடைபெறும் வாழ்வியல் சடங்குகள் மிகவும் முக்கியமாக பிறப்பு முதல் இறப்பு வரையுள்ள சடங்கு சம்பிரதாயங்களை கூறுவதே இவ்வாய்வு ஆகும். “சுருள்வீச்சு” என்னும் சிறுகதைத் தொகுப்பு தென் மாவட்ட பண்பாட்டு பதிவாக அமைந்துள்ளது. இதன் அடிப்படையிலே இக்கட்டுரை அமைகிறது.

**Keywords / திறவுச் சொற்கள்:** பண்பாடு; சடங்குகள்; பண்பாட்டு பெருமைகள்; மரபுகள்

**How to cite / மேற்கோள் காட்டும் முறை:** பெ, மு. (2026). தென் மாவட்ட சடங்கு முறைகள். Tamilmanam International Research Journal of Tamil Studies, 20(01), Volume 2, –.

## பிறப்புச் சடங்குகள்

குழந்தை பிறந்தவுடன் “சேனைதொடுதல்” நிகழ்ச்சி நடைபெறும்.குடும்பத்தின் பெரியவர்கள் அல்லது உறவினர்கள் தங்கள் கைகளால் இனிப்புக் கலந்த நெய் அல்லது தேனை எடுத்து குழந்தையின் நாவில் தடவுவர் குழந்தை நல்ல குணங்களுடன் வளர வேண்டும் என்பதற்காக இச்சடங்கு செய்யப்படுகிறது.ஆனால் இங்கு இருக்கும் மக்கள் குழந்தையை தொட்டிலில் இடம்பொழுதுதான் குழந்தையின் நாவல் தேனை வைப்பர். குழந்தை பிறந்து பொதுவாக 7,9,11 அல்லது 13 ஆம் நாளில் தாய் மாமன் தரும் தொட்டியில் குழந்தையை இட்டு காதுகளில் குலதெய்வத்தின் பெயரை மூன்று முறை சொல்லி அழைப்பர்.

தாய் சேய் நலனை கருத்தில் கொண்டு அவரவர் சௌகரியத்திற்கு தகுந்தாற்போல் பின்பற்றுகின்றனர். இப்பகுதியில் இதனை தீட்டு கழிப்பது அல்லது தொட்டிலில் போடுவது என்று அழைக்கப்படுகிறது.

## சிகை நீக்கி காதுக்கு பொன்சேர்ப்பு விழா

காதணி விழா அல்லது காது குத்துதல் குழந்தை பிறந்த சில ஆண்டுகள் கழித்து குழந்தைகளுக்கு முடி எடுத்து மொட்டை அடித்து காது குத்தப்படும்.இச்சடங்கு தாய் மாமனை வைத்தே நடைபெறும்.தாய் மாமன் மடியில் உட்கார வைத்து முடி இறக்கப்படும்.பின்பு அதே தாய்மாமன் மடியில் உட்கார வைத்து காது குத்தப்படும்.இச்சடங்கு வெகு விமரிசையாக நடத்தப்படும்.இதில் தாய்மாமன் சீர்வரிசை ஊரையே வியக்க வைக்கும் அளவில் இருக்கும். தாய்மாமன் கொண்டு வரும் பொன் (கம்பல்)நகையே காது குத்தும்போது போடப்படுகின்றது.

## மௌனச் சிதறல்கள்

பூம்புச்சடங்கு என்பது ஒரு பெண் பூப்படைந்தவுடன் (வயதுக்கு வந்தவுடன்) அவளது தாய் அவளுக்கு தனி ஒரு பச்சை குடில் அமைத்து தருவாள்.அந்த குடிசை பச்சை தென்னை ஓலையை வைத்து வீட்டின் ஒதுக்கு புறமாக அமைத்துத் கொடுக்கப்படும்.தென் மாவட்டத்தைப் பொருத்தவரையில் தாய்மாமன் என்பவன் தாய்யிற்கு அடுத்தபடியாக எல்லா சடங்குகளிலும் தாய் மாமன் முதலிடம் வகிக்கிறான். “சுருள்வீச்சு” சிறுகதைத்தொகுப்பில் மௌனச் சிதறல்கள் என்னும் பகுதியில் பூப்பெய்தப்பெண் அடையும் மனவேதனையும் அவளுக்கு துணையாக அவள் அம்மா உடனிருப்பாள் என்பதும் கூறப்படுகிறது.

இவ்வாறு பூப்படைந்த பெண் “ஏழாவது நாள் பெரியவர்களுக்கு முன்பாகவே மஞ்சள்,வேப்பிலை,கிருமி நாசினிப் பொருட்கள் கலந்த நீரால் குளிக்க வைத்தார்கள்”. அந்த ஏழு நாட்களுக்கும் அப்பத்தா வற்புறுத்தி அளித்த உளுந்தங்களி, நல்லெண்ணெய்,பச்சரிசிக் கஞ்சி போன்ற உணவுகள் அவளுக்கு அளிக்கப்பட்டது.இப்பகுதிகளில் உப்பில்லா பச்சரிசி துவரம் பருப்பு கலந்த உணவை முதல் உணவாக அளிக்கப்படும்.மௌனச் சிதறல்கள் பகுதி ஒரு பெண்ணின் மனநிலையை முழுமையாக விளக்குகிறது.ஒரு பெண்ணின் வரும் சுழற்சி கிட்டத்தட்ட அவளின் வாழ்நாளில் 455 முறை ஏற்படும் என்னும் கணக்கினையும் குறிப்பிட்டுள்ளது.

## திருமணச் சடங்குகள்

தென் மாவட்டத் திருமணங்களில் உறவுமுறைகளும் ஊர் கட்டுப்பாடுகளும் மிக முக்கியப் பங்கு வகின்றன.

பரிசம் போடுதல்

## நலங்கு சடங்கு

மணமக்கள் அல்லது சடங்கு பெண்ணின் உடலில் உள்ள திருஷ்டிகளை நீக்கி அவர்களைப் பொலிவடையச் செய்யும் நிகழ்வாகும். மணமக்களை ஒரு பாயிலோ அல்லது மரபலகையிலோ (மணை) கிழக்கு நோக்கி அமர வைத்து முதலில் கை,கால்களில் நலங்கு மாவு பூசி விடுவார்கள்.நெற்றியில் சந்தனம் குங்குமம் வைப்பார்கள். பன்னீர் தலை மற்றும் தோள்களில் தெளித்து வாழ்த்துவார்கள்.சடங்கின் நிறைவாக சுண்ணாம்பு மற்றும் மஞ்சள் கலந்த சிவப்பு நீரால்(ஆரத்தி)சுற்றி திருஷ்டி கழிப்பார்கள்.திருமண பதற்றத்தில் இருக்கும் மணமக்களுக்கு இதுபோன்று செய்வதால் அவர்கள் இயல்பு நிலைக்குக் கொண்டு வர உதவுகிறது.

## பொன்னுருக்குதல்

திருமணத்திற்கு சில நாட்களுக்கு முன்பு மாப்பிள்ளை வீட்டில் மணமகளுக்கான தாலி செய்ய தங்க நாணயத்தை கொடுத்து உருக்கும் சடங்கு நடைபெறும்.அதன்பின் அவரவர் குடும்ப வழக்கப்படி தாலிச் செய்யப்படும். முளைப்பாரி கை (முளைப்பாரி) நவதானியங்களை திருமணத்திற்கு மூன்று நாட்கள் முன்பு ஊறவைத்து முலைய விட்டு அதனை மண்ணால் செய்யப்பட்ட பாலிகையில் இட்டு மணப்பந்தலில் வைக்கப்படும்.அவைசெழித்து வளர்வது போன்று மணமக்களின்

வாழ்க்கையும் செழிக்க வேண்டும் என்று மணமக்களை வாழ்த்தி பெண்கள் பாடல் பாடப்படுகின்றன.

## இறப்புச் சடங்கு

இறப்புச் சடங்குகளிலும் தென் மாவட்டங்களில் சில தனித்துவமான முறைகள் உள்ளன. இறந்தவர்களின் பெருமைகளையும், வாழ்வையும் பாட்டாக பாடிவரும் ‘ஒப்பாரி கலை’ இங்கு இன்னும் உயிர்ப்போடு உள்ளது. இறந்தவர்களை இறுதியாக குளிப்பாட்டுவதற்கு நிலக்கதவை கழற்றி அதில் இறந்தவரின் உடலை போட்டு நீராட்டுவார்கள். அப்படியாக குளிப்பாட்டுவதற்கு உற்றார் உறவினர்கள் ஒன்று சேர்ந்து நீர்கொண்டு வந்து குளிப்பாட்டுவர்.அதன்பின் அவர்களின் உடலுக்கு கோடித்துணி போடப்படும். அதை மகள்கள் மருமகன்கள் மற்றும் நெருங்கியஉறவினர்கள் புதிய துணிகளை போர்த்தும் சடங்கே கோடி போடுதல் ஆகும்.

இறந்த எட்டாம் நாளில் எட்டுக் கும்பிடும் செய்யப்படும். உறவுமுறைகள் பங்காளிமுறை உள்ளோர்,அனைவரும் உணவுப் பொருட்கள் கொண்டு வந்து ஒன்றாக சமைதத்து வழிபடுவர். அதன்பின் பதினாறாம் நாளில் தீட்டு கழித்து பெரிய காரியம் அல்லது கிரியை செய்யப்படும்.அதையடுத்து கிடா வெட்டி ஊருக்கே விருந்து வழங்கும் நிகழ்வு பரவலா நடைபெற்று வருகிறது.

## முடிவுரை

தமிழகத்தின் பிறப்பகுதிகளைக் காட்டிலும் தென்மாவட்டங்களின் சடங்குகள் தனித்துவமானது. மக்களின் வாழ்வியலோடு ஆழமாகப் பிணைக்கப்பட்டவை. பிறப்பு முதல் இறப்பு வரை மனித வாழ்வின் ஒவ்வொரு முக்கியக் கட்டத்தையும் இப்பகுதி மக்கள் தங்களின் சடங்குகள் வழியாகச் கூட்டு வாழ்க்கை முறையையும் உறவுகளுக்கு இடையேயான பிணைப்பையும் பலப்படுத்துகின்றனர். காலமாற்றத்திற்கு ஏற்ப சில சடங்குகள் உருமாறினாலும், தென் மாவட்ட மக்களின் வாழ்வியலையும், பண்பாட்டு பெருமையையும், பறைசாற்றும் இந்த சடங்குகளை அடுத்த தலைமுறைக்குக் கடத்துவது நம் ஒவ்வொருவரின் கடமையாகும்.

## துணைநூற் பட்டியல் (References)

1. சுருள் வீச்சு
2. முனைவர் அ.சுகந்தி அன்னத்தாய்
3. 16, இரண்டாம் குறுக்குத் தெரு, டிரஸ்ட் புரம்,
4. கோடம்பாக்கம், சென்னை - 600024.
5. முதற்பதிப்பு -2025.

© 2026 முனைவர்.தீபா பெ. This is an open-access article distributed under the terms of the CC BY 4.0 licence, which permits use, distribution and reproduction in any medium, provided the original work is properly cited. Published by / வெளியீடு: Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi..